Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 02, 2022

செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 02, 2022 | ஒளி: 06 கதிர் 065 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free



# ஆடி மழை

## மலையகத்தில் வெளுத்து வாங்குகிறது

- காட்டாறு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது
- இருவர் மரணம்: பலரும் நிர்க்கதி
- மண் சரிவுகளால் போக்குவரத்து பாதிப்பு
- தபால் உட்பட ரயில் சேவைகளும் முடங்கின
- கங்கைகளின் கரைகளை மேவிச்செல்லும் வெள்ளம்
- நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்தும் அதிகரிப்பு
- 7 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை
- நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரிப்பு





ஆடி மாதம், நாளையுடன் (ஓகஸ்ட்-03) நிறைவடைந்து ஆவணிமாதம் பிறக்கவிருக்கும் நிலையில், மலையகத்தின் பல பிரதேசங்களையும் ஆடி மழை புரட்டிப்போட்டு தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சி P2

# வெள்ளியன்று எரிவாயு விலை குறைக்கப்படும்



உலக சந்தையில் எரிவாயு விலை குறைந்துள்ள காரணத்தினால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி எரிவாயுவின் விலை குறைக்கப்படும் என்றும் இந்த சலுகை நுகர்வோருக்கு வழங்கப்படும் எனவும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### காலி முகத்திடல் கரையில்

# மற்றுமொரு சடலம் கரையொதுங்கியது

காலி முகத்திடல் கரையோரத்தில் இனந்தெரியாத நபரொருவரின் சடலம், நேற்று (01) அதிகாலை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### கோட்டா வந்தால் அரசியல் குழம்பும்

# கோட்டாபய வருவதற்கு சரியான நேரம் இதுவல்ல என்கிறார் ரணில்

## ராஜபக்ஷவுடன் ரணில் தொடர்பில் உள்ளார்; ஜேர்னல் செய்தி



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஇலங்கைக்கு விஜயம் செய்வதற்கு இது சரியான நேரம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்று வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# நாட்டின் பணவீக்கம் 60.8% சதவீதமாக அதிகரிப்பு


## ஜூலையில் உணவுப் பணவீக்கம் 90.9%



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்கான முதன்மைப் பணவீக்கமானது ஜூன் 2022 இல் 54.6% இல் இருந்து 2022 ஜூலையில் 60.8% ஆக அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# குரங்கம்மையால் முதல் மரணம் பதிவு



மங்கி பொக்ஸ் எனப்படும் குரங்கு அம்மை நோயால் முதலாவது உயிர் இந்தியாவில் பறிபோயுள்ளது.

இதில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து கேரளாவின் - திருச்சூர் பகுதிக்கு பிரவேசித்திருந்த 22 வயதான இளைஞர் நோய் அறிகுறிகள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சனிக்கிழமை உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையில் அவருக்கு குரங்கம்மை தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கேரள சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்.

# மஹிந்த, பசிலின் பயணத்தடை வியாழன் வரை நீட்டிப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட அறுவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை நீட்டிக்குமாறு, உயர்நீதிமன்றம், நேற்று (01) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

# டனிஸ் அலிக்கு விளக்கமறியல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட டனிஸ் அலியை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (01) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# கோட்டாவை மொட்டு எப்போதும் வரவேற்கும்

பா.நிரோஸ்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவே உள்ளார் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்ததோடு, கட்சிக்குள் இருந்துக்கொண்டு சுயாதீனமாக இயங்கிவரும் சதிகாரர்களை கட்சியிலிருந்து நீக்குவோம் எனவும் அறிவித்தார்.முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை பிரஜை என்றடிப்படையில் அவர் நினைக்கும்போது நாட்டுக்கு வர முடியும். நாட்டுக்கு வந்த பின்னர் அவர் அரசியலில் ஈடுபட விரும்பினால் மொட்டுக்கட்சி அவரை வரவேற்கும் என்றார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்,

தொடர்ச்சி P2

# சலுகைகளை பெற்றுக்கொள்ள இது நேரமல்ல

## மக்கள் ஆணைக்கு செல்ல முடியவில்லை என்றால் புதிய கட்டமைப்பின் கீழான வேலைத்திட்டம் அவசியம்



தற்சமயம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றாலும், அரசியல் தலைகளை மாற்றுவதை விடவும், அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் அரசியல் சுயநலன்களை விடுத்து நாட்டைப் பற்றி சிந்திப்பதே அவசியமாகியுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### சீனக்கப்பல் விவகாரத்தில்

# இலங்கையின் நகர்வு ஆரோக்கியமானதல்ல



சீன கண்காணிப்பு கப்பல் இலங்கைக்கு வருவதால் இலங்கைக்கு நெருக்கடி இல்லை, ஆனால் இந்தியாவுக்கு பாரிய அச்சுறுத்தல் உள்ளது. சீனக் கப்பல் வருகை தொடர்பில் இலங்கையும் இருவேறு நிலைப்பாடுகளில் கருத்துக்களை தெரிவித்திருப்பதும் ஆரோக்கியமானதல்ல என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார். இலங்கையின் அனுமதியை பெற்று சீன கப்பல் ஹம்பாந்தோட்டைக்கு வரவிருந்தாலும் கூட இது மோசமான நகர்வாகும். ஏனெனில், இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதையும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். இலங்கையை பொறுத்தவரை அதன் வெளிவிவகாரக் கொள்கையை உறுதியாக பின்பற்றியாக வேண்டும்,

தொடர்ச்சி P2

### சர்வகட்சி அரசாங்கத்தில் பிரதமர் பதவியை

# சிறுபான்மை இனத்தவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்

பா.நிரோஸ்

இந்நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் ஒருபோதும் நாட்டின் பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதில்லை.

தொடர்ச்சி P2

### வெளிநாடு செல்ல முயன்ற

# 47 பேர் கைது

இலங்கை கடற்படையினர் மற்றும் வென்னப்புவ பொலிஸாரால் நேற்று முன்தினம் (31) இரவு வென்னப்புவ நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், கடல் வழியாக வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 47 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவிதுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஆடி மழை

ஆடி மாதம், நாளையுடன் (ஓகஸ்ட்- 03) நிறைவடைந்து ஆவணிமாதம் பிறக்கவிருக்கும் நிலையில், மலையகத்தின் பல பிரதேசங்களையும் ஆடி மழை புரட்டிப்போட்டு தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றது.

மழை வெள்ளம், காட்டாறுகள் பெருக்கெடுத்தல், மண்சரிவு, மதில்கள் சரிந்து விழுதல், கங்கைகள், ஆறுகளில் கரைகளை மேவி பாயும் வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் இதுவரையிலும் இருவர் மரணமடைந்துள்ளனர். பலரும் நிர்க்கதியாகியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதுடன், நீர்த்தேக்கங்களில் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதனால் பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இந்த பேய் மழை, நேற்றுமுன்தினம் (01) நள்ளிரவு முதல் வெளுத்து வாங்குகின்றது. இதனால், அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகளில் மண்சரிவுகள் மற்றும் ரயில் தண்டவாளங்களை மூடியிருக்கும் வெள்ள நீர் ஆகியவற்றின் காரணமாக மலையகத்தில் பல இடங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டு இரவு தபால் ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டன. மலையகத்துக்கான பல ரயில் சேவைகள் முடங்கிவிட்டன.

இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட இரண்டு மரணங்களும் நுவரெலியா மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. அம்பகமுவ- பொல்பிட்டிய பிரதேசத்தில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் 61 வயதுடைய பெண் ஒருவரும் 05 வயதுடைய சிறுமியும் உயிரிழந்துள்ளனர். மலையகத்தை உள்ளடக்கிய ஏனைய மாவட்டங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால், பலரும் நிர்க்கதியாகியுள்ளனர்.

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி தீவிரமடைந்துள்ள நிலையில் நாட்டில் பல பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் சாத்தியம் இருப்பதாகவும் காற்றின் வேகம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இந்நிலையில், காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மேல், சப்ரகமுவ, வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு மேல் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## வெள்ளியன்று...

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை லிட்ரோ தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நிதியமைச்சினால் எரிவாயுவுக்கான விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த சூத்திரத்தின் பிரகாரம் இந்த வாரம் எரிவாயு விலை குறைக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

எரிவாயு விலை 50 ரூபாய்க்கு மேல் குறையும் என்று குறிப்பிட்ட அவர், உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை குறைவதால் ஏற்படும் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்குவதே விலை சூத்திரத்தின் சாதகமான அம்சமாகும் என்றார்.

எதிர்காலத்தில் விலை ஏற்ற இறக்கங்களை கணிக்க முடியாது என கூறிய அவர், அவ்வப்போது எரிவாயு விலை திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## மற்றுமொரு சடலம் கரையொதுங்கியது

சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் என்றும் குறித்த நபர் நீல நிற சட்டை மற்றும் உள்ளாடை அணிந்திருந்ததாகவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சடலம் அடையாளம் காணப்பட்ட பின்னர் பிரேத பரிசோதனை நடத்தப்படும் என்று தெரிவித்த அவர், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவரின் சடலம் காலி முகத்திடல் கடற்கரையில் கடந்த 29ஆம் திகதியன்று கரையொதுங்கியிருந்த நிலையில், நேற்றும் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 07 பேர் பலியாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த, பசிலின் பயணத்தடை வியாழன் வரை நீட்டிப்பு

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, விஜித் மலல்கொட, எல். டி.பி. தெஹிதெனிய மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ. அந்த. லக்ஷ்மன் மற்றும் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆர்டிகல ஆகியோர், மன்றின் அனுமதியின்றி நாட்டைவிட்டு செல்லமாட்டோம் என்று தங்களுடைய சட்டத்தரணிகள் ஊடாக மன்றுக்கு அறிவித்தனர்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரி அடிப்படை உரிமைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் மற்றும் ஜெஹான் கனகரட்ன உட்பட மூன்று பல்கலைக்கழக கல்வியாளர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ. அந்த. லக்ஷ்மன் மற்றும் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆர்டிகல ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## கோட்டாபய வருவதற்கு சரியான நேரம் இதுவல்ல என்கிறார் ரணில்

வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு நேற்று முன்தினம் (31) வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ , விரைவில் இலங்கைக்கு வருவார் என்பதற்கான எவ்வித தகவலும் தனக்கு கிடைக்கவில்லை என்றும் அவர் நாட்டுக்கு வந்தால், மீண்டும் அரசியல் குழப்பம் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில், ராஜபக்ஷவுடன் தொடர்ந்தும் தொடர்பு வைத்திருக்கிறார் என்றும் நிர்வாக கையளிப்பு பிரச்சினைகள் மற்றும் ஏனைய அரசாங்க விடயங்களை கையாள்வதாகவும் ஜேர்னல் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஜூலை 13ஆம் திகதியன்று கோட்டாவை பதவிலகுமாறு எழுந்த எதிர்பைத் தொடர்ந்து நாட்டை விட்டு தப்பியோடிய அவர் பதவியை இராஜினாமா செய்ததாகவும் அதன்பின்னர் பாராளுமன்றத்தினூடு ரணில், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாகவும் ஜேர்னல் செய்தி குறிப்பிட்டது.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கிக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு போதுமான நிதியைத் தேடும் திறன் இருப்பதாக தான் நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடம் உரம், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 3 பில்லியன் டொலர்களுக்கு மேல் இலங்கை பெற வேண்டும் என்றும் இலங்கையர்கள் தங்களது பொருளாதார சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பதற்கு சில மாதங்கள் செல்லும் என்றும் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கிட்டத்தட்ட 21 பில்லியன் டொலர் கடனைச் செலுத்த வேண்டியுள்ள இலங்கை, இலங்கை சுமார் 12 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஏப்ரலில் இடைநிறுத்தியது என்றும் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டின் பணவீக்கம் 60.8% சதவீதமாக அதிகரிப்பு

ஜூன் 2022 இல் 80.1% ஆக இருந்த உணவுப் பணவீக்கம் ஜூலை 2022 இல் 90.9% ஆக அதிகரித்துள்ளதாகவும், அதே நேரத்தில் உணவு அல்லாத பணவீக்கம் 2022 ஜூன் 2022 இல் 42.4% இலிருந்து 46.5% ஆக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, போக்குவரத்து (பெட்ரோல், டீசல், விமான கட்டணம் மற்றும் பேருந்து கட்டணம்), உணவகம், ஹோட்டல்கள், வீடுகள், நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் பிற எரிபொருள் ( எரிவாயு,) பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மேலும், உணவு வகைக்குள் பால் மா, அரிசி மற்றும் மீன் உணவுகளின் விலை , காய்கறிகள், தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் விலையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமல்லாது, ஜூன் 2022 இல் 18.4% ஆக இருந்த ஆண்டின் சராசரி பணவீக்கமானது, ஜூலை 2022 இல் 23.1% ஆக உயர்ந்துள்ளதாகவும், பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தை பிரதிபலிக்கும் முக்கிய பணவீக்கமானது, ஜூன் 2022 இல் 39.9% இலிருந்து ஜூலை 2022 இல் 44.3% ஆக அதிகரித்துள்ளதுடன், ஆண்டுக்கான சராசரி அடிப்படை பணவீக்கம் ஜூலை 2022 இல் 13.3% இல் இருந்து 16.7% ஆக அதிகரித்துள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

## டனிஸ் அலிக்கு விளக்கமறியல்

கடந்த 26ஆம் திகதியன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டுபாய் நோக்கி புறப்பட இருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் வைத்து, அவர் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற பிடியாணைக்கு அமைய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட அவர், கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் கடந்த 27ஆம் திகதி ஆஜர்படுத்தியபோது, நேற்றையதினம் வரை விளக்க மறியலில் வைக்குமாறும் பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் கட்டளையிட்டிருந்தார்.

கோட்டை பொலிஸாரால் விடுத்த கோரிக்கைக்கு அமைய, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்துமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய நேற்று, மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட டனிஸ் அலியை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

ஜூலை 13 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை, நேரடி ஒளிபரப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் கூட்டுத்தாபனதின் ஒளிபரப்பை சிறிது நேரம் இடைநிறுத்த வற்புறுத்தியமைக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதியன்று விமான நிலையத்தில் வைத்து கைது செய்ப்பட்ட அவர், தான், நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை என்றும், சர்வதேச சமூகத்துக்கு போராட்ட எதிர்ப்புச் செய்தியை எடுத்துச் செல்வதற்காகவும் ஐ.நா.விடம் வழக்கை முன்வைப்பதற்காகவும் வெளிநாட்டுக்கு பயணிப்பதாக தனிஸ் அலி குறிப்பிட்டார்.

தலைமுடியை வெட்டி மற்றும் தாடியை சவரம் செய்திருந்தமை குறித்து வினவியபோது, தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் கோரிக்கைக்கு அமையவே அவ்வாறு செய்ததாக தெரிவித்தார்.

## இலங்கையின் நகர்வு...

இந்த விடயத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றார். சீனா எமது நெருக்கமான நட்பு நாடு, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சீனாவின் ஆயுத உதவிகள் மிகவும் அவசியமாக இருந்தன. தற்போது ஜனாதிபதி ரணில் சீனாவுக்கு செல்ல தயாராகின்றார். சீனாவின் நட்பு அவசியம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், சீனாவுடன் நெருக்கமாக இருக்கின்றோம் என்பதற்காக இந்தியாவை பகைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இந்தியாவின் பாதுகாப்பு குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.இதற்காகவே இலங்கையின் வெளிவிவகார கொள்கை மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்

## சிறுபான்மை இனத்தவருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்

எனவே சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைந்தால் அதில் பிரதமர் பதவியை சிறுபான்மை இனத்தவர்களுக்கு வழங்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரை பிரதமராக்கும் எண்ணம் எமக்கில்லை. ஆனால், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவருக்காவது பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்பதே எனது விருப்பம். இலங்கை வரலாற்றில் முன்னொருபோதும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதில்லை. இந்தியாவில் பழங்குடியினரைச் சேர்ந்தவரை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளனர்.அதேபோல் முன்னுதாரணச் செயற்பாடாக எமது நாட்டிலும் தமிழ் அல்லது முஸ்லிம்களுக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஏன் பிரதமர் பதவியை வழங்க முடியாது. சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவது தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை வைத்தே தீர்மானிக்க முடியும். இம்மாதம் 09ஆம் திகதி போராட்டத்துக்கு பொன்சேகா எம்.பி அழைப்பு விடுத்துள்ளமை அவரது தனிப்பட்ட தீர்மானம் என்றார்.

## கோட்டாவை மொட்டு எப்போதும் வரவேற்கும்

மஹிந்த ராஜபக்ஷவை மய்யப்படுத்தியே இக்கட்சி உருவாக்கப்பட்டது. எனவே அவரே இன்றும், நாளையும் இக்கட்சியின் தலைவர். பொதுஜன பெரமுனவுக்கு பயப்படும் சிலரே கட்சியின் தலைமைத்துவத்தை மாற்ற வேண்டும் எனக் கூறுகிறார்கள். கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்றார்.

மொட்டுக் கட்சியிலிருந்து விலகிச் சென்று சுயாதீனமாக இயங்கும் சிலரே கட்சிக்கு எதிரான சதித்திட்டங்களை தீட்டி வருகிறார்கள். இந்த சதிகாரர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் எச்சரித்தார்.

## சலுகைகளை பெற்றுக்கொள்ள...

அமைச்சர்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதால் நாட்டுக்கு மேலும் சுமைகளை ஏற்படுத்தாது, அரசாங்கத்தை அமைக்க புதிய மக்கள் ஆணைக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். மக்கள் ஆணைக்கு செல்ல முடியவில்லை என்றால் புதிய கட்டமைப்பின் கீழ் தேசிய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை எட்ட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (1) நடைபெற்ற ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு குறித்து சிந்திக்கவும், நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தருணமும் வந்துள்ளதாகவும், சுயநலத்திற்கு பதிலாக பொதுநலமான மனோபாவமும் , சந்தர்ப்பவாதத்திற்கு பதிலாக நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கும் மனோபாவமும் வேண்டும் எனவும், சலுகைகள்,வரப்பிரசாதங்களைப் பெற்று மக்கள் மீது சுமையை ஏற்றுவதற்கு பதிலாக அறிவார்ந்த முறையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு சகல கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், நாடாளுமன்ற குழு அமைப்பின் ஊடாக சாதகமான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த அவர், வரப்பிரசாதங்களை பெற்று கூடிய சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இது நேரமல்ல எனவும்,தற்சமயம் பங்கேற்பு அபிவிருத்தி மூலம் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். நாடு குறித்து சிந்தித்து தேசிய வேலைத்திட்டம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டும். புத்திசாலித்தனமாகவும், தெளிவாகவும் நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு கட்சி பேதமின்றி சகல கட்சியின் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமாக இணைந்து செயற்பட முடியும். மாறாக சலுகைகள், அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ள இது நேரமல்ல. இது தொடர்பில் தானும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி நம்பிக்கை கொள்வதாகவும், இப்போது நாம் எதிர்க்கட்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் அடுத்த மக்கள் ஆணையில் அரசாங்கமாக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## 47 பேர் கைது

இலங்கை கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கு கடற்படை கட்டளை பிரிவு மற்றும் வென்னப்புவ பொலிஸாரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வென்னப்புவ பிரதேசத்தில் வைத்து சந்தேகத்துக்கிடமான 03 வான்களை சோதனையிட்டதன் பின்னர் கடல் வழியாக வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18 வயதுக்கு மேற்பட்ட 37 ஆண்கள் மற்றும் 06 பெண்கள் மேலும் 18 வயதுக்குட்பட்ட 04 பேர் மற்றும் இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட 03 வான்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்கள், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, புத்தளம், சிலாபம், மாரவில, மஹாவெவ, முந்தல் மற்றும் வெள்ளவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வென்னப்புவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படை மேலும் தெரிவித்தது.

# ஜனாதிபதி ஆணைக்குழுவை அமையுங்கள்

பா.நிரோஸ்

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர்களை தண்டிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

போராட்டங்கள் மூலமாக ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க காலி முகத்திடல் போராட்டத்துக்கு காரணமான அனைவரையும் கைது செய்து வருகிறார். இதன்



ஊடாக நாட்டு மக்களுக்கு உள ரீதியாக அச்சுறுத்தலை விடுத்து வருகிறார். போராட்டக்காரர்களை தண்டிப்பதற்கு பதிலாக போராடுவதற்கு தூண்டிய பிரதான காரணங்களை கண்டறிந்து அவற்றை இந்த அரசாங்கம் தீர்க்க வேண்டும். பல கிலோமீற்றர்கள் நடந்து கொழும்புக்கு வந்த மக்களே கொழும்பை சுற்றிவளைத்தனர். மக்கள் இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ரணில் இவற்றை சிந்திப்பதற்கு பதிலாக தனது அரசியல் இலக்கு தொடர்பிலேயே சிந்தித்து வருகிறார். ஐக்கிய தேசிய கட்சியையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளை ரணில் முன்னெடுக்கிறார்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்று ஒன்று இருக்கிறதா என எண்ணத் தோன்றுகிறது. நாட்டில் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கொலைகளுக்காக யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? அரசாங்கம் ஏன் இதனை தடுக்காமல் இருக்கிறது? அரசாங்கத்தின் உதவியுடனா இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்கிற சந்தேகம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இன்று திரிபு நிலையே காணப்படுகிறது. நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றால் முறையான சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். நாட்டையும், உலகையும் ஏமாற்றும் சர்வகட்சி அரசாங்கத்தில் நாம் இணைய மாட்டோம். மொட்டுக் கட்சிக்கு வாக்களித்தவர்கள் இன்று அந்த கட்சியுடன் இல்லை. இவ்வாறான நிலையில் மொட்டையும் ஐக்கிய தேசிய கட்சியையும் இணைந்து செயற்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது, ஐக்கிய தேசிய கட்சியை அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளது எனவும் கூறினார்.

## ரணில் ஒரு திறமையான மாலுமி

### மொட்டுக்கட்சி புகழாரம்

பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையான மாலுமி என்பதாலேயே நாடு எனும் கப்பலை நாம் அவரிடம் ஒப்படைத்துள்ளோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எவரையும் ஜனாதிபதி வேட்பாளராக நாம் களமிறக்கவில்லை. சர்வகட்சி அரசாங்கம் ஒன்று நாட்டில் அமைக்கப்பட வேண்டும் என்பதாலேயே நாம் எமது கட்சியிலிருந்து வேட்பாளரை களமிறக்கவில்லை என்றார்.

அது மாத்திரமன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 40 வருட அரசியல் அனுபவமுள்ள சிறந்த அரசியல்வாதி. அவருக்கு சர்வதேசத்தின் வரவேட்பு இருக்கிறது. அத்தோடு எமது நாடு எனும் கப்பல் பேர்முடா முக்கோண வலயத்துக்கு அருகில் இருக்கிறது. எனவே இப்போது அனுபவமற்ற மாலுமிகளிடம் கப்பலை செலுத்துவதற்கு ஒப்படைக்க முடியாது. ரணில் அனுபவமுள்ள திறமையான மாலுமி என்பதாலேயே நாட்டை ஒப்படைத்துள்ளோம் என்றார்.

மேலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏனையோருடன் ஒப்பிடும்போது கட்சி அரசியல் செய்யும் நிகழ்ச்சி நிரல் குறைவாகவே பாராளுமன்றத்துக்குள் காணப்படுகிறது. பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி ரணிலால் இயங்க முடியும் என்றார்.

300,000 யூரோக்கள் பெறுமதியான

## அவசர உதவியை வழங்குகிறது இத்தாலி

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையின் உணவு பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்தில் இலங்கைக்கு 300,000 யூரோக்கள் பெறுமதியான அவசர உதவியை வழங்க இத்தாலி தீர்மானித்துள்ளதாக கொழும்பிலுள்ள இத்தாலி தூதரகம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மூலம் இந்த நிதி பங்களிப்பு வழக்கப்படும் எனவும், உணவு உதவி மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு வவுச்சர்களை விநியோகித்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் இந்நிதி மூலம் மேற்கொள்ளப்படும் என்று தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையை அதிகரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சர்வதேச சமூகம் இலங்கைக்கு தனது ஆதரவை வழங்குவது மிக முக்கியமானது என நாங்கள் நம்புகிறோம் எனக் கூறியுள்ள தூதரகம், இந்த அவசர உதவி நடவடிக்கை இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய வலுவான கூட்டாண்மையின் கட்டமைப்பிற்குள் வருகிறது என தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரலில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்காக 350.000 யூரோகள் வழங்கப்பட்டன . மேலும் கடந்த காலங்களில், 2004 சுனாமிக்குப் பின்னரும், இலங்கைக்கு தேவை ஏற்படும் போதெல்லாம் இத்தாலி தொடர்ந்து ஆதரவளித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, விவசாயத் துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன் முயற்சிகளுக்கு இத்தாலி ஆதரவளித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## அக்கிராசனத்தில் அமர்கிறார் ரணில்

பா.நிரோஸ்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாளைய தினம் (03) ஆரம்பித்து வைத்து அக்கிராசன உரை நிகழ்த்தப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் உள்ள நாட்டை எவ்வாறு மீட்பது என்ற பொருளாதார திட்டங்களையும், அடுத்த 02 வருடங்களுக்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள், சர்வகட்சி அரசாங்கத்தில் அனைத்து கட்சிகளையும் இணைந்துக்கொள்ளச் செய்வதற்கான அழைப்பையும் ஜனாதிபதி இதன்போது விடுப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சி தலைவராக, அமைச்சராக, பிரதமராக கடந்த 40 வருட தனது அரசியல் வரலாற்றில், தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க முதன்முறையாக அக்கிராசனத்தில் அமரப்போவதோடு, அக்கிராசன உரையும் ஆற்றவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாளை காலை 9.40 மணியளவில் பாராளுமன்றத்துக்கு வருகைதரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 9.55 மணியளவில் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலை வந்தடைவார் எனவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு வரும் ஜனாதிபதியை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும், பாராளுமன்ற செயலாளர் நாயகமும் வரவேற்பார்கள். 10.30 மணியளவில் சபைக்கு வரும் ஜனாதிபதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவர் அக்கிராசனத்தை அடையும் வரையில் எழுந்து நின்று வரவேற்பார்கள். இதனைத் தொடர்ந்து 9ஆவது பாராளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடருக்கு ஜனாதிபதி வைபவ ரீதியாக தலைமை தாங்குவார்.

இதன் பின்னர் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை, பாராளுமன்றத்தைக் கூட்டுதல் பற்றிய பிரகடனத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாசிப்பார்.அதன் பின்னர் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் அக்கிராசன உரை நிகழ்த்தப்பட உள்ளது. அத்துடன் அடுத்த பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 9ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெறும் இந்நிகழ்வில், புதிய ஜனாதிபதிக்கு 21 குண்டுகள் முழங்க பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படவுள்ளது. பாராளுமன்ற பார்வையாளர் கலரி மூடப்பட்டே இருக்குமென பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் இந்த விசேட நிகழ்வில் வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள் உள்ளிட்ட விசேட பிரமுகர்களுக்கு கலரிக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## வழிபாட்டில்...

கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று(1) பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், சம்பிக்க ரணவக்க மற்றும் குமார வெல்கம ஆகியோர் வழிபாட்டில் கலந்துகொண்டனர்

முதலீட்டாளர்களின் நம்பிக்கையை

## மறுசீரமைக்கிறது முதலீட்டுச் சபை



வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான உச்ச நிறுவனமான முதலீட்டுச் சபை (BOI), பின்னடைவுகள் இருந்தாலும் புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், இலங்கையில் சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்நிலை இணையவழிக் கருத்தரங்குகளைத் தொடங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது.

கடினமான காலங்கள் முதலீட்டாளர்களுக்கு நாட்டில் புதுமையான முதலீடுகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகளுக்கான ஒரு காலமாக இருக்கும் என்று முதலீட்டுச் சபை கருதுகிறது. எனவே, நாட்டிற்கு புதிய முதலீடுகளைக் கொண்டுவரும் வகையில், சாதகமான திசையில் நகர்வதை உறுதிசெய்வதற்கு முதலீட்டுச் சபை எந்தக் கல்லையும் விட்டுவைக்கவில்லை.

மேலும், முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தில் 27வது மாடியில் சமீபத்தில் வெளியிடப்பட்ட முதலீட்டாளர் வசதி நிலையம் (IFC) பற்றிய விழிப்புணர்வை முதலீட்டாளர்களுக்கு இணையவழிக் கருத்தரங்கு தொடர் உருவாக்குகிறது.

உலகெங்கிலும் உள்ள பங்கேற்பாளர்களுடன் உற்பத்தித் துறையை உள்ளடக்கிய ஸூம் மூலம் தொடரின் முதல் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம் வீரகோன் வழங்கிய விளக்கக்காட்சியுடன் 60 நிமிட வலையரங்கம் ஆரம்பமானது,

அங்கு அவர் முதலீட்டு சூழல், முதலீட்டு ஊக்குவிப்பு, திறமை மற்றும் கல்வி, சந்தை அணுகல், வாழ்க்கைத் தரம் மற்றும் இருப்பிட நன்மைகள் போன்ற பகுதிகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் 'ஏன் இலங்கை' என்ற தலைப்பில் ஒரு மேலோட்டத்தை வழங்கினார்.

உற்பத்தித் துறைக்கு முதலீட்டுச் சபை வழங்கும் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பற்றி எடுத்துக்காட்டிய அதேவேளையில், இலத்திரனியல், மின்னியல் உதிரிப்பாகங்கள், வள்ளம் கட்டுதல், இறப்பர் சார்ந்த பொருட்கள், புடைவை, ஆடைகள் உற்பத்தித்துறை, வாகனங்களின் பாகங்கள், மருந்து, மருத்துவ சாதனங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் கைத்தொழில்களில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து திருமதி வீரகோன் விளக்கினார்.

அமர்வைத் தொடர்ந்து கேள்வி-பதில் அமர்வு நடைபெற்றது, இது பதிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் தங்கள் கேள்விகளை சிரேஷ்ட முதலீட்டுச் சபை அதிகாரிகள் குழுவிடம் முன்வைக்க உதவியது.

சீனா, ஜப்பான், இந்தியா, கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், வங்காளதேசம், ஐககிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், டென்மார்க், நோர்வே, ஸ்வீடன், பின்லாந்து, துருக்கி, அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 206 பங்கேற்பாளர்கள் பதிவு செய்ததில் இணையவழிக் கருத்தரங்கிற்கு அபரிமிதமான ஆர்வம் இருந்தது.

வலைப்பதிவுத் தொடர் குறித்து கருத்து தெரிவித்த முதலீட்டுச் சபை தலைவர் ராஜா எதிரிசூரிய, நாட்டில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் இலங்கையில் முதலீடு செய்வதனை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் இவ்வாறான இணையவழிக் கருத்தரங்குத் தொடர் மிகவும் பொருத்தமானது என்றார்.

"முதல் இணையவழிக் கருத்தரங்குத் தொடரைப் பொறுத்த வரையில், உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களை, மிகுந்த ஆர்வத்துடனும், உத்வேகத்துடனும் இணையவழிக் கருத்தரங்குத் தொடரில் இணைந்திருப்பதைப் பார்க்கும் போது, இது மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது. இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இதுவும் ஊக்கமளிக்கும் காரணியாகும்" என்று முதலீட்டுச் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.


இந்தத் தொடரின் அடுத்த இணையவழிக் கருத்தரங்குகள் முறையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், சேவைத்துறை மற்றும் பயன்பாட்டுத் துறைகள் போன்ற துறைகளை ஆராய்வதுடன் முதலீட்டுச் சபையின் இணையதளமான wwinvestsrilanka.com மூலம் அறிவிக்கப்படும்.

## இணையவழி கற்றலில் பாலியல் துஷ்பிரயோகம்

இணைய வழியிலான (நிகழ்நிலை) கற்றல் செயற்பாடுகளின் போது பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு அதிகளவான பிள்ளைகள் முகங்கொடுப்பது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தனுஜா திஸாநாயக்க தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட எமது சமூகத்தில் அந்த சம்பவத்தை மூடிமறைத்துக்கொண்டு செயற்படுவதையே காணமுடிகிறது. சில நேரங்களில் பிள்ளைகளை பாடசாலைகளில் இருந்து விலக்கிவிடுகின்றனர். இதுபோன்ற சில சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன என்றார்.



துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் பிள்ளைகளை குற்றவாளிகளாக பார்க்கும் நிலையே காணப்படுகிறது. பிள்ளைகளுக்கு எதிரான துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம் கோரல்


# காலம் நீடிப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாண கல்வி வலயங்களுக்கு இடையிலான 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடம் மாற்றத்துக்கான விண்ணப்பம், எதிர்வரும் 1ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி என்.பிள்ளைநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள சகல கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வலயத்தில் இருந்து இன்னும் ஒரு வலயத்துக்கு தமது விருப்பத்தின் பெயரில் இடம்மாற்றம் பெற விரும்புகின்ற




ஆசிரியர்கள் மற்றும் தமது வலயத்துக்கென வலய இடமாற்ற அதிகாரியால் தீர்மானிக்கப்படுகின்ற சேவை காலத்துக்கு மேலதிகமாக கடமை புரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் முதல் நியமன வலயத்தில் நியமன கடிதத்தின் படி கட்டாய சேவை காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களிடமும், ஒரு வலயத்தில் 05 வருட கால சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கை அமைய, தத்தமது வலயத்திலுள்ள சகல ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு இது தொடர்பாக அறிவித்து அதற்கமைய ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து இடமாற்ற விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றத்துக்கு ஏற்கெனவே கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் இடமாற்றம் பெறுகின்ற ஆசிரியர்களின் விவரங்களை மாகாண இடமாற்ற சபைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓட்டோக்களை

## பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தல் ஆரம்பம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

எரிபொருள்களைப் பெறுவதற்காக ஓட்டோக்களை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள், மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தந்தப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் ஓட்டோக்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவுக்கேற்ப இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனடிப்படையில், ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டோக்களை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையர்

## குவைத்தில் மரணம்

எப்.முபாரக்



திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது யாசீன் நயீம் (வயது 48) என்பவர், குவைத்தில் நேற்று முன்தினம் (31) மாலை உயிரிழந்துள்ளார்.


மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

சடலம், குவைத் வைத்தியசாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதுடன், அடக்கம் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

## மீண்டும் அதிகரிப்பு

வ.சக்தி



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஜுலை 18ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்குநோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதுடன், இவ்வாண்டில் மொத்தமாக 901 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் எமது மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தரவுகள் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

“டெங்கு நோயின் தாக்கத்தை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன் , வீடுகளில் நீர் தேங்கியிருக்கும் இடங்களை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுத்து, எமது சுற்றுப்புற சூழலை சுகாதார முறையில் பேணுவது எமது கடமையாகும்.

“பெறுமதியான மனித உயிரை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றாய் செயற்பட்டு, எமது நாட்டில் இருந்து டெங்குவை ஒழிப்பதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்” என்றும் அவர் அறிக்கையிட்டுள்ளார்.

1,500 லீற்றர் டீசலுடன்

## அதிகாலையில் இருவர் கைது

சகா

நிந்தவூரிலிருந்து கொண்டு வரப்பட்ட 1,500 லீட்டர் டீசலுடன் இருவர், நேற்று (01) அதிகாலை காரைதீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள்.

காரைதீவு பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் .எஸ் .ஜெகத் தலைமையிலான குழுவினர் அதிரடியாக அவர்களை அதிகாலை 12 .27 மணியளவில் மடக்கி பிடித்தார்கள்.

காரைதீவு பிரதான வீதி விபுலானந்த சதுக்கத்தில் உள்ள பொலிஸ் சாவடி ஊடாக குறித்த 1,500 லீற்றர் டீசலை ஏற்றிய வாகனம் செல்லுகையில், அதனை நிறுத்தி சோதனை செய்யும் போது, இந்த டீசல் கடத்தல் பிடிபட்டது.

நிந்தவூரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இருந்து மாளிகைக்காட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையில் இவ் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



திருட்டு

## நகைகளை அடகு வைத்தவர் கைது

எச்.எம்.எம்.பர்ஸான்



நகை திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் நபரொருவரை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த 26 ஆம் திகதி சுமார் 6 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு திருடப்பட்ட நகைகளை கண்டுபிடிக்க பொலிஸாருடன் இணைந்து நகை உரிமையாளர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், திருடப்பட்ட நகைகளை, தனியார் அடகு நிலையம் ஒன்றில் நபரொருவர் அடகு வைக்கச் சென்றபோது நேற்று முன்தினம் (31) கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**“ திருடப்பட்ட நகைகளை கண்டுபிடிக்க பொலிஸாருடன் இணைந்து நகை உரிமையாளர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில், திருடப்பட்ட நகைகளை, தனியார் அடகு நிலையம் ஒன்றில் நபரொருவர் அடகு வைக்கச் சென்றபோது நேற்று முன்தினம் (31) கைது செய்யப்பட்டுள்ளார்**

சர்வகட்சி அரசில் தமிழ் கட்சிகள்

# பங்கெடுப்பது அவசியமாகும்

### ஈ.பி.டி.பி வலியுறுத்தல்

எம்.றொசாந்த்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று, சர்வ கட்சி அரசில் தமிழ் கட்சிகள் பங்கெடுப்பது அவசியமாகும் என, கடற்றொழில் அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், “நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள சர்வ கட்சி அரசை அமைத்து முன்னோக்கி செல்வதன் ஊடாகவே சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான அழைப்பையும் சர்வ கட்சிகளுக்கும் கடிதமாக அனுப்பி வைத்துள்ளார்.

“ஜனாதிபதியின் அந்த அழைப்பை ஈ.பி.டி.பி வரவேற்பது மாத்திரமல்லாது, அந்த நோக்கம் செயல்வடிவம் பெறுவதற்கான பங்களிப்பையும் செய்துவருகின்றது.

“இந்த நிலையில், சர்வ கட்சியில் பங்கெடுப்பதும், சர்வ கட்சி அரசின் எதிர்கால வேலைத்திட்டத்தில், மூன்று தசாப்பத்திற்கும் மேலாக கொடிய யுத்த வன்முறைக்கு முகம் கொடுத்து பல வழிகளிலும் இழப்புக்களைச் சந்தித்துள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக்கொண்டு ஒரு தேசிய இனமாக நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

“எனவே, ஏனைய தமிழ்க் கட்சிகள் தமது வழமையான எதிர்ப்பு அரசியல் எனும் சமகாலத்துக்குப் பொருத்தமற்ற அரசியல் போக்கை கைவிட்டு, ஈ.பி.டி.பியாகிய நாம் தொடர்ந்தும் கூறிவரும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறைக்கு வருவது காலத்தின் அவசியமாகும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.



யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து

## விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

வி.நிதர்ஷன்





யாழ் ஆரோக்கிய நகரத் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட ‘ஆரோக்கியத்தின் பாதையில்’ என்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணி, நேற்று (01) காலை 7 மணியளவில் ஆரம்பித்து, காலை 8 மணியளவில் நிறைவடைந்தது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் பேரணி, அங்கிருந்து ஆடியபாதம் வீதி வழியாகக் கொக்குவில் சந்தியை அடைந்து, அங்கிருந்து கே.கே.எஸ் வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, அவ் வீதி வழியாக வேம்படிச் சந்தியை வந்தடைந்தது.


அங்கிருந்து பலாலி வீதி ஊடாகப் பரமேஸ்வராச் சந்தியை அடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் நுழைவாயிலில் நிறைவடைந்தது.

அண்ணளவாக 10 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவபீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், யாழ் போதனா வைத்திசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ் மாநகர மேயர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மின்னல் தாக்கியதால்

## தேவாலயத்தில் பரபரப்பு

வி.நிதர்ஷன்



யாழ்ப்பாணம், குருநகரிலுள்ள தேவாலயமொன்றில் ஞாயிறு ஆராதனை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, தேவாலயத்தை மின்னல் தாக்கியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

குருநகர், புனித ஆரோக்கியநாதர் தேவாலயத்தில் நேற்று முன்தினம் (31) காலை 6.30 மணியளவில் ஆராதனை இடம்பெற்றபோதே, இந்தச் சம்பவம் நடந்ததாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தேவாலயத்தில் நடந்த இந்த மின்னல் தாக்கத்தால் மேற்கூரைப் பகுதிகளும், மின் இணைப்புக்களும் சிறிது சேதமடைந்தன. எனினும், யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை வீழ்ச்சி பதிவான நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

க.அகரன்



வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில், ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த ரஞ்சா என்று அறியப்பட்ட 30 வயதுடைய யோன்சன் மரணமடைந்துள்ளார்.

ஆயுதம் தாங்கிய குழு ஒன்று தாக்கியதில் பலத்த காயமடைந்து, ஒரு கை முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிதம்பரபுரம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர்.

சடலம் சட்டவைத்தியரின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மலையகத்தில் கடும் மழை

- வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின
- போக்குவரத்துகள் துண்டிப்பு
- இயல்பு வாழ்க்கை பாதிப்பு
- மண்மேடுகளும் சரிந்தன
- தாழ்நிலங்களில் வெள்ளம்
- நீர்மட்டங்களும் உயர்ந்தன







மலைவாஞ்ஞன், யோகேசன், கேதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகத்தில் நேற்றுமுன்தினம் (31) திகதி இரவு முதல் கடும் மழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதனால் ஹட்டன்-கொழும்பு மற்றும் ஹட்டன் -நுவரெலியா ஹட்டன் -பொகவந்தலாவை உள்ளிட்ட பல வீதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டு, போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

காசல்ரி, மவுசாக்கலை, கெனியோன், விமலசுரேந்திர, லக்ஸபான, நவலக்ஸபான, மேல் கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் மிக வெகுவாக உயர்ந்து வருகின்றன.

நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு மின்சாரத்துறை பொறியியலாளர்கள் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவலை,வட்டவளை, ஹட்டன், குடாகம, கொட்டகலை, சென்கிளையார், தலவாக்கலை,ரதல்ல நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் பனிமூட்டம் நிலவுவதாகவும் இதனால் வளைவுகள் நிறைந்த இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் அவதானமாக செயற்படுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கினிகத்தேனை - பிட்டவல பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்தமையால், ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அத்துடன், ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியின் ஹட்டன் தொடக்கம் கித்துல்கல வரையான பல பகுதிகளில் மரங்கள் வீதிகளில் முறிந்து விழுந்துள்ளதுடன், மண்மேடுகளும் சரிந்துள்ளன.

இரத்தினபுரி- வேவல்வத்த வீதியின் தெஹென எல்ல நீர்வீழ்ச்சிக்கு அருகில் மண்மேடு சரிந்து விழுந்ததுடன் மரங்களும் குறித்த பகுதியில் முறிந்து விழுந்தைமையால் குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

இதேவேளை ஹட்டன் எம். ஆர். பகுதியில் பாதுகாப்பு மதில் ஒன்று உடைந்து விழுந்ததில் இரண்டு வர்த்தக நிலையங்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இந்தச் சம்பவம் நேற்று (01) பகல் 1 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்தின் பணியாளர்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

கொட்டகலை- கொமர்ஷல் பகுதியிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள சிறிய ஆறு பெருக்கெடுத்தமை காரணமாக, சுமார் 50 வீடுகள் நீரில் மூழ்கியதாகவும் குறித்த வீடுகளில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களில்தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## 8 மாணவர்கள் பாதிப்பு

ராமு தனராஜா

பதுளை- பல்லகெடுவ களப்பிட்டகந்த தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் 8 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர் ஒருவர் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவை அந்த எட்டு மாணவர்களும் பகிர்ந்து உண்டுள்ளனர்.

இதனையடுத்து ஏற்பட்ட ஒவ்வாமையின் காரணமாக 8 மாணவர்களும் பல்லகெடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



## மயிரிழையில் தப்பிய பயணிகள்

பி.கேதீஸ்

தலவாக்கலை பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸின் மீது பெரிய மரமொன்று நேற்றுக்காலை விழுந்ததில் பஸ் சேதமடைந்துள்ளது.

எனினும், இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நேரத்தில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸின் மீதே குறித்த மரம் விழுந்துள்ளது.

## பெற்றோலை திருடிய சாரதியும் உதவியாளரும் கைது

ராமு தனராஜா

கொழும்பிலிருந்து பெட்ரோலுடன் ஹப்புத்தளை சிபெட்கோ களஞ்சியசாலைக்கு சென்று கொண்டிருந்த கொள்கலனிலிருந்து பெட்ரோலை திருடிய குற்றச்சாட்டின் கீழ், கொள்கலன் வண்டியின் சாரதியும் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (31) இரவு இடம்பெற்றுள்ளது.

ஹப்புத்தளை - கலுப்பான பகுதியில் வைத்து குறித்த இருவரும் 9 லீற்றர் பெட்ரோலை திருடியுள்ளனர் என ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் ஹல்துமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## மான் குட்டி மீட்டு ஒப்படைப்பு

காமினி பண்டார

நோர்வூட் பிரதேச தோட்டமொன்றில் தாயொன்றிடம் இருந்து பிரிந்த தடுமாறிய மான் குட்டியொன்று தோட்ட மக்களால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (1) பகல் குறித்த மான் குட்டி தோட்ட மக்களால் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மான் குட்டி பத்திரமாக நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மவுசாகலை பிரதேசத்தில்

## முதலாவது தொழிற்பயிற்சி நிலையம்

செ.தி. பெருமாள்

பாடசாலை கல்வியை தொடர்ந்து தொழிற்கல்வியை வழங்கும் நோக்கிலும் IMHO நிறுவனத்தின் சுயத்தொழில் விசேட வேலைத்திட்டத்தின் கீழ், மவுசாகலை 320ஐ கிராம சேவகர் பிரிவில் தையல் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிலையத்தின் ஊடாக மவுசாகலை, ப்ரௌன்லோ, கிறவன்எலிய ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் பயனடையவுள்ளனர்.

மவுசாகலை பிரதேசத்தில் முதலாவதாகவும் முன்னுதாரணமாகவும் ஆரம்பிக்கப்பட்ட இந்த பயிற்சி நிலையத்தை போல, சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பயிற்சி நிலையங்களை அமைத்து அதன் ஊடாக இளைஞர் யுவதிகளின் தொழிற்கல்வியை மேம்படுத்த IMHO நிறுவனத்தின் ஊடாக முழுமையாக முயற்சிப்பதாக அந்த நிறுவன முகாமையாளர் கந்தையா விக்னேஷ்வரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அம்பகமுவ பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மஸ்கெலியா பிரதேச சபை தவிசாளர் ஜி. செண்பகவள்ளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வருமானம் குறைந்தவர்களின்

## வாழ்வாதார மேம்பாட்டுக்கு பெரண்டினா உதவி

என்.ஆராச்சி

புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் நோக்கில் பெரண்டினா அபிவிருத்தி நிறுவனத்தால் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் ஒரு கட்டமாக குறித்த குடும்பங்களுக்கு தேயிலை மற்றும் கருவா உற்பத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தற்போது ஊரும்வெல, எகந்தவ, உடபொத, நாரங்கல மற்றும் நெலுவக்கன ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள 35 குடும்பங்களுக்கு கருவா மற்றும் தேயிலை உற்பத்திக்கு தேவையான தொழிநுட்ப உதவிகளையும் பெரண்டினா நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

மேலும், குறித்த உற்பத்திக்கான நிலத்தை உருவாக்க தலா பத்தாயிரம் ரூபாயும் தேவையான கருவா மற்றும் தேயிலைக் கன்றுகளும் புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.




## தேர்தல் மாத்திரமே கூட்டணியின் இலக்கல்ல

எஸ்.கணேசன்

“தமிழ் முற்போக்கு கூட்டணியானது, தேர்தலை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படும் கூட்டணி கிடையாது. அது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாகும். எனவே, தலைமைப்பதவியில் மனோ கணேசன் நீடிப்பார். ஒன்றிணைந்த எமது பயணம் தொடரும்” என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (1) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

“நாட்டின் நலன்கருதி, சர்வகட்சி அரசாங்கத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அழைப்பு விடுத்துள்ளார். சர்வகட்சி அரசாங்கத்தையே நாடும், சர்வதேசமும்கூட எதிர்பார்க்கின்றது. நாமும் அதனை வரவேற்கின்றோம்.



“சர்வகட்சி அரசாங்கம் சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில் இருந்தாலும், தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுக்கப்படும் முடிவே அறிவிக்கப்படும்.

“தமிழ் முற்போக்கு கூட்டணி எதிர்வரும் 03 ஆம் திகதி கூடவுள்ளது. அதன்பின்னரே சர்வகட்சி அரசில் இணைவதா அல்லது எமது வகிபாகம் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

“தமிழ் முற்போக்கு கூட்டணி, தேர்தலுக்கான கூட்டணியல்ல. அது மக்களுக்கான - கொள்கை அடிப்படையிலான கூட்டணி. எமது கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை” என்றார்.

அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர்

## இராஜினாமா

துவாரகஷான்

அக்கரபத்தனை பிரதேசசபையின் தவிசாளர் சுப்ரமணியம் கதிர்செல்வன் தான் வகித்து வந்த பிரதேச சபை தவிசாளர் பதவியிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அத்துடன், தனது இராஜினாமா கடிதத்தையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமானிடம் நேற்று முன்தினம் (31) மாலை கையளித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக அக்கரபத்தனை பிரதேச சபை தவிசாளராக கதிர்செல்வன் பதவி வகித்து வந்தார்.

தான் பதவி விலகியமையானது தனது தனிப்பட்ட தீர்மானமே என்று தெரிவித்துள்ளதுடன், தனது பதவி விலகலுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்க்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் காங்கிரஸ் உயர் பீடம் எடுக்கும் முடிவுகளுக்கு இணங்குவதாகவும், யாரையும் கேட்டு தனக்கு இந்த பதவி வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## ஆசிரியர் இடமாற்றத்தை ஆளுநரிடம் எடுத்துரைப்போம்

பி.கேதீஸ்

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைந்த கணித பாட ஆசிரியர் இடமாற்ற விடயம் மத்திய மாகாண ஆளுநரின் கவனத்தில் கொண்டு செல்லப்படும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் காங்கிரஸ் கல்வியியல் ஒன்றியத்தின் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் சுமார் 75 மாணவர்கள் இணைந்த கணித பாடநெறியை உயர்தரத்தில் பயின்று வருகின்றனர்.

இப்பாடநெறியை கற்பிப்பதற்காக பாடசாலையில் ஒரே ஓர் ஆசிரியரே கடமையாற்றி வந்திருக்கிறார். இந்நிலையில் பாடசாலை அதிபர், வலய கல்விப் பணிமனை அனுமதிக்காத நிலையில் குறித்த ஆசிரியர் மற்றுமொரு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கணித, விஞ்ஞான பாட நெறிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

எனவே, குறிப்பிட்ட பாடசாலையில் பணிபுரியும் இணைந்த கணித பாட ஆசிரியரை இடமாற்றம் செய்வதாக இருந்தால் அவருக்காக இன்னொரு பதில் ஆசிரியர் நியமித்து விட்டு குறிப்பிட்ட ஆசிரியரை விடுவிப்பதில் பாடசாலை சமூகத்திற்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

இவ்விடயம் சம்பந்தமான தெளிவான விளக்கங்களை மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகேயை சந்தித்து காங்கிரஸ் கல்வியியல் ஒன்றியம் எடுத்துரைக்கும் என்றார்.

**“ நுவரெலியா மாவட்டத்தில் கணித, விஞ்ஞான பாட நெறிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே, குறிப்பிட்ட பாடசாலையில் பணிபுரியும் இணைந்த கணித பாட ஆசிரியரை இடமாற்றம் செய்வதாக இருந்தால், அவருக்காக இன்னொரு பதில் ஆசிரியரை நியமித்து விட்டு குறிப்பிட்ட ஆசிரியரை விடுவிப்பதில் பாடசாலை சமூகத்திற்கு ஆட்சேபனை கிடையாது. இவ்விடயம் சம்பந்தமான தெளிவான விளக்கங்களை, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகேயை சந்தித்து காங்கிரஸ் கல்வியியல் ஒன்றியம் எடுத்துரைக்கும்**

# பதுக்கலைத் தடுக்க சடுதியான விலைக்குறைப்பு அவசியம்

பிரச்சினைகளுக்கு எப்போது தீர்வு கிடைக்குமென வானத்தையே பார்த்துக்குக் கொண்டிருக்கும் மக்களுக்கு 'விலைக்குறைப்பு' எனும் செய்தி, காதுகளுக்கு தேன் சொரிவதாய் அமைந்திருக்கும். எனினும், கப்பல் வருகிறது; கப்பல் வருகிறது என்ற கதையாகிவிடாமல், யதார்த்தமாக விலைக்குறைப்பு இருக்கவேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

விலைக்குறைப்பு அறிவிப்பை கேட்டவுடன், பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுவோரின் முகங்கள் சுருங்கிவிடும். அதிகரிக்கப்பட்ட விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்துகொண்டு, குறைந்த விலையில் விற்பனை செய்வதை, பதுக்கல்காரர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

நாட்டுக்குள் பிரச்சினைகள் இருக்கும் வரையிலும் பதுக்கல் வர்த்தகத்தில் ஈடுபடுவோரே கொள்ளை இலாபம் ஈட்டுவர். பொருட்களுக்கு இயற்கையாகவே தட்டுப்பாடுகளை ஏற்படுத்துவர். இதையொரு 'வர்த்தக இராஜதந்திரம்' என்றும் கூறிக்கொள்வர். எனினும், ஆகக்குறைந்த நிர்ணய விலை நிர்ணயிக்கப்படுமாயின், நுகர்வோரும் பிரச்சினைகள இன்றி, பொருட்களைக் கொள்வனவு செய்வர்.

எரிபொருட்கள், சமையல் எரிவாயு என்பவற்றில் விலைகள் குறைக்கப்படவுள்ளன என்ற அறிவிப்பானது, நுகர்வோருக்கு மகிழ்ச்சியூட்டுவதாய் இருக்கிறது. எனினும், பெருந்தொகையில் களஞ்சியப்படுத்தி இருப்போருக்கும் கறுப்புச் சந்தையில் விற்பதற்கு சட்டவிரோதமான முறையில் சேமித்து வைத்திருந்தோருக்கும், விலைக்குறைப்பு அறிவிப்பு பெரும் தலையிடியாய் இருக்கும்.

ஆனாலும், கறுப்புச் சந்தைக்காரர்களின் கைகளை கட்ட வேண்டுமாயின், விலையை குறைப்பதற்கு தீர்மானித்திருக்கும் முடிவில் சிறு மாற்றங்களை ஏற்படுத்தி, அதனை விடவும் இரண்டொரு மடங்குகளில் விலைகளை குறைத்துவிட வேண்டும். அப்போதுதான், பதுக்கல்காரர்களுக்கு ஒரு பாடத்தை கற்பித்துக்கொடுக்கமுடியும்.

எரிபொருட்கள், சமையல் எரிவாயுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதெல்லாம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், சேவைக்கட்டணங்கள், போக்குவரத்துச் செலவுகள் உள்ளிட்டவை சடுதியாக, மறுகணமே அதிகரிக்கப்பட்டன. அதேபோல, விலைக்குறைப்பின் போதும், இவையாவும் குறைக்கப்பட வேண்டும். இல்லையேல், நுகர்வோருக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்காது.

உதாரணமாக, சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டபோது, ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், வெதுப்பகங்கள் என சாப்பாட்டுப் பொருட்களின் அளவுகளும் குறைக்கப்பட்டன; விலைகளும் கூட்டப்பட்டன. அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் அதிகார சபையினர் கண்காணிக்க வேண்டும்.

பல நாள்களாக கண்விழித்து, மழை,வெயில் பாராது, கால்கடுக்க வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக்கொள்வோர், வீடுகளுக்குத் திரும்பியவுடன் அவற்றை கேன்களில் நிரப்பிக்கொள்வதை பலரும் படம்பிடித்துள்ளனர். எனினும், வீடுகளுக்கு வெளியில் வாகனங்களை நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டால், அதிலிருந்து எரிபொருள் களவாடப்படுகின்றது. அதனை பாதுகாப்பதற்கே, எரிபொருள் நிரப்பிய கேன்களை வீட்டுக்குள் வைத்துக்கொள்கின்றோம் என பலரும் விளக்கமளிக்கின்றனர்.

மிக இலகுவில் தீப்பற்றக்கூடிய எரிபொருட்களை வீட்டுக்குள் வைத்திருப்பது பேராபத்தானது என்பதை நினைவில் கொள்வதுடன், சகலருக்கும் சேவைகள் கிடைக்குமாயின் வரிசைகளை குறைப்பது வெகு தொலைவில் இல்லை என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைத்து, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து, செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அறுவடைக்குத் தயார்நிலை

## நெல் வயல்களை அழிக்கும் யானைகள்

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்படவுள்ள நெல் வயல்களை, காட்டு யானைகள் தேசப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை போன்ற எல்லைப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கையை, மாலை வேளையில் வரும் யானைக் கூட்டம், அறுவடை செய்யவுள்ள நெல் வயல்களை தேசப்படுத்தி வருகிறது. அத்துடன், ஒலுவில், அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பின்தங்கிய பிரதேசங்களிலும் யானைகளின் தொல்லை காணப்படுகிறது.

இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுவதால், எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக, மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று, காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்கள், பெண்கள், நோயாளர்கள் இத்தகைய நிலைமையால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் புகும் யானைக் கூட்டம், தோட்டங்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்துவதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டுமென, பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம். ஹனீபா

### முஸ்லிம் சமூகத்துக்கான

# சரியான அரசியல் வழித்தடம் எது?

மொஹமட் பாதுஷா

இலங்கையின் அரசியல், வேறு விதமான பரிமாணத்தை எடுத்து, மாறுபட்ட வழித்தடத்தில் பயணிக்கத் தொடங்கியிருக்கின்ற இன்றைய சூழ்நிலையில், முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல் எவ்வாறு முன்னகரப்போகின்றது என்ற கேள்வி, சிந்திக்கும் ஆற்றலுள்ள முஸ்லிம் மக்களுக்கு எழுந்திருக்கின்றது.

தேர்தல் முடிவடைந்த பிறகு, எந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கு அமைச்சு கிடைக்கப் போகின்றது என்ற பேச்சு, முஸ்லிம் அரசியல் அரங்கில் நிரம்பி வழியும். ஏதோ அமைச்சு கிடைத்தால், முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, சாதனை நிகழ்த்திக் காட்டுவார்கள் என்பதாகவே அந்த 'அலப்பறை'கள் இருக்கும்.

அதுபோல, புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட பின்னர், 'அந்த முஸ்லிம் கட்சி தலைவருக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்படப் போகின்றது', 'இந்த பாராளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்துடன் பதவிக்காக இணையப் போகின்றார்' என்ற ஊகக் கதைகள், இப்போது பேசுபொருளாகி இருக்கின்றன. முஸ்லிம் அரசியல் அணிகளும் சில முஸ்லிம் பொதுமக்களும் எந்தளவுக்கு குறுகிய ஒரு வட்டத்துக்குள் சிந்தித்து செயற்படுகின்றார்கள்? நமது அரசியல் தொலைநோக்கு, எந்தளவுக்கு மழுங்கடிக்கப்பட்டு இருக்கின்றது என்பதற்கு, இதுபோன்ற மட்டகரமான கருத்தாடல்கள் நல்ல உதாரணங்களாகும்.

இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில், எல்லா விடயங்களிலும் அவர்களுக்கான இடம் ஒதுக்கப்பட வேண்டும். துறைசார்ந்த நியமனங்களில், இன விகிதாசாரம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே, அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதிலும் இரு நிலைப்பாடுகள் இல்லை.

ஆனால், இலங்கை முஸ்லிம் மக்களுக்கான அரசியல் என்பது, வெறும் அமைச்சுப் பதவிகளோடும், ஆட்சியாளர்கள் அல்லது பெரும்பான்மைக் கட்சிகளிடமிருந்து கைமாறாக கிடைக்கின்ற ஒருசில வெகுமதிகளோடும் முடிந்து விடுகின்றதா என்பதுதான், விடை தேடப்பட வேண்டிய வினாவாகும்.

ஆளும் கட்சியோ எதிர்க்கட்சியோ, எந்தவொரு பெருந்தேசிய அரசியல் தரப்புக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் முட்டுக் கொடுத்துக் கொண்டு இருப்பதால், அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை தம்வசம் வைத்திருப்பதால், முஸ்லிம் சமூகத்தின் உரிமைசார் நெருக்கடிகள், நீண்டகாலப் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்றால், 'பதவி வேண்டும்' என்ற நிலைப்பாட்டில் ஒரு நியாயம் இருப்பதாகச் சொல்லலாம்.

முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளடங்கலாக, முஸ்லிம் தனித்துவ கட்சிகள் சார்பிலும், பெரும்பான்மைக் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்தும் கடந்த காலத்தில் பல எம்.பிக்கள் பலமிக்க அமைச்சர்களாக இருந்தார்கள். அரச மேலிடத்துடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், கடந்த 25 வருடங்களில் மேற்குறிப்பிட்டவாறான அபூர்வங்கள் எதுவும் நடந்ததில்லை.

முஸ்லிம் கட்சித் தலைவர்கள், சமூகத்தின் காவலர்கள் போல கதையளந்து கொண்டு, ஆண்டாண்டு காலமாக அரசியல் செய்பவர்கள், தமக்கு கிடைத்த அதிகாரத்தை, பதவியை, வாய்ப்பைப் பயன்படுத்தி, சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றியதாக ஞாபகத்தில் இல்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, அதற்குள் ஆயிரம் உள்முரண்பாடுகளும் விமர்சனத்துக்குரிய செயற்பாடுகளும் இருந்தாலும் கூட, ஒப்பீட்டளவில் சிறப்பானதோர் அரசியலைச் செய்து வருகின்றது. எந்த அமைச்சுப் பதவியும் இல்லாமல், முட்டுக் கொடுக்கும் அரசியலைச் செய்யாமல் தமிழ் மக்களின் பல பிரச்சினைகளை கூட்டமைப்பு முன்கொண்டு சென்றிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கவில்லை என்பதென்னவோ உண்மைதான். ஆயினும், தமிழ் மக்களின் காணிகளை விடுவித்தமை, கைதிகள் விடுதலை, உரிமைசார்ந்த விடயங்கள் என சிலவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றது. இந்நிலை முஸ்லிம் அரசியலில் கிடையாது.

முஸ்லிம்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இரண்டு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளுடன் தொடர்புடைய பிரச்சினைகள் இருக்கின்றன. இனவிகிதாசார ஒதுக்கீட்டில் பாரபட்சம் உள்ளது. அரச நிர்வாக மற்றும் உயர் பதவிகளில் உரிய பங்கு கிடைப்பதில்லை. தென்னிலங்கை, மலையக முஸ்லிம்களுக்கு வேறுவிதமான பிரச்சினைகள் உள்ளன.

எனவே, இவற்றில் ஒன்று இரண்டைத்தானும் கடந்த காலத்தில் அதிகார கதிரைகளில் இருந்த முஸ்லிம் தலைவர்கள், அமைச்சர்கள் தீர்த்து வைத்திருக்க வேண்டும். இருப்பினும், எம்.எச்.எம். அஷ்ரபின் பிற்காலத்தில் இருந்து இன்றுவரையான காலப்பகுதியில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் எதுவும் சரியான வழித்தடத்தில் முன்கொண்டு செல்லப்படவில்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

எனவே, இன்று முஸ்லிம் சமூகம் சிந்திக்க வேண்டியதும் கலந்துரையாட வேண்டியதும் 'கோட்டபாய பெயில் ஆகிவிட்டார்', 'ரணிலும் பெயில் ஆகிவிடுவார்' என்பதையல்ல! மாறாக, ஆண்டாண்டு காலமாக தொடர்ச்சியாக 'பெயிலாகி'க் கொண்டே இருக்கின்ற முஸ்லிம் அரசியலை புனருத்தாரணம் செய்து, சித்தியடையச் செய்வதைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

எல்லாச் சமூகங்களையும் இனக் குழுமங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகளைப் போல, முஸ்லிம் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கும் இரண்டு வகையான வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். ஒன்று, சமூகம் சார்ந்தது. மற்றையது, நாட்டுக்குப் பொதுவான வேலைத் திட்டமாகும்.

நாட்டுக்கு பொதுவான வேலைத்திட்;டம் என்பது, முஸ்லிம் என்ற இன அடையாளத்துக்கு வெளியில் சென்று, நாட்டிலுள்ள எல்லா மக்களுக்குமாக முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகளாக அமையும். இது காலச்சூழல்களைப் பொறுத்து பெரும்பாலும் மாறிக் கொண்டே இருக்கும்.

தாம் சார்ந்த மக்களுக்கான வேலைத்திட்டம், நிலையானதாக இருக்கும். அதனுடன் புதிதாக உருவாகின்ற பிரச்சினைகளும் சேர்த்துக் கொள்ளப்படும். சமூகத்துக்கான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஆயினும், பெருந்தேசிய அரசியலில் ஏற்படுகின்ற மாறுதல்களைப் பொறுத்து, அதனை அடைந்து கொள்வதற்கான வழித்தடம், அணுகுமுறை மாறுபடக் கூடும். ஆனால், சென்றடைய வேண்டிய அடிப்படை இலக்கு நிலையானதாக இருக்க வேண்டும்.

முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், இப்போதும் கடந்த காலத்திலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த, வகிக்கின்ற முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள், இவ்வாறான ஓர் இலட்சணத்துடன் பயணித்தார்கள் என்று ஆறுதல் கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

ஒரு மாணவன் புத்திசாலியாக இருந்தால், அவனது பெறுபேறுகளில் அது தெரியும். ஒரு விவசாயி சிறப்பாக பயிர்ச் செய்கை மேற்கொண்டால் அவனது அறுவடை கனதியாக இருக்கும்.

அதுபோல ஓர் அரசியல் தலைவர், தனது சமூகம் சார்ந்த அரசியலில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக வெற்றிகரமான அணுமுறையொன்றை பின்பற்றினால், அதன் பலாபலன்கள் சமூகத்துக்குக் கிடைக்க வேண்டும். ஆனால், இத்தனை கட்சிகள், தலைவர்கள், எம்.பிக்கள் உருவான பிறகும் எந்த முன்னேற்றமும் இல்லை.

முஸ்லிம்களுக்கு இணக்க அரசியலே பொருத்தமானது என்பது பொதுவான அபிப்பிராயமாகும். அதனடிப்படையில் ஏதோ ஒரு தருணத்தில் அரசாங்கம் மற்றும் பெருந்தேசியக் கட்சிகளுடன் இணங்கிப் போக வேண்டி வரும் என்பதும் இயல்பானது, இருப்பினும் அதிலிருந்து சமூகத்துக்கும் நன்மைகள் கிடைக்க வேண்டும்.

தனித்துவ அடையாள அரசியலையோ அல்லது பெருந்தேசியக் கட்சிகளின் ஊடான அரசியலையோ முன்னிறுத்தி அரசியலுக்கு வந்த முஸ்லிம் எம்.பிக்கள் பலர், அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்கள். சிலர் ஓய்வுபெறும் காலத்தில் உள்ளனர். வேறுசிலர் மக்களால் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆனால், சமூகத்தின் நீண்டகால பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

பிரச்சினைகள், அபிலாஷைகள் தீர்க்கப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, பல்லின நாடொன்றுக்குப் பொருத்தமான குணாம்சங்களுடன் முஸ்லிம் சமூகம் சரியாக அரசியல் மயப்படுத்தப்படவும் இல்லை. மக்களின் வாக்குகளை சில்லறையாக வாங்கிச் சென்று, மொத்தமாக கைமாற்றுகின்ற அரசியலைத்தான் இப்போதெல்லாம் பேரம்பேசும் அரசியல் என்று சொல்லி, முஸ்லிம் சமூகம் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள், பிரச்சினைகள் என்பவை முஸ்லிம் எம்.பிக்களின் அபிலாஷைகளோ அவர்களைச் சுற்றியிருக்கின்ற கூட்டத்தின் தேவைகளோ அல்ல. அது, 22 இலட்சம் மக்களுடன் தொடர்புபட்டதாகும்.

பிரேமதாஸவுக்கும் சந்திரிகாவுக்கும் மஹிந்தவுக்கும் கோட்டாபயவுக்கும், ரணிலுக்கும், சஜித்துக்கும் எவ்வித சமூக பலனும் இல்லாமல், வெறுமனே முட்டுக்கொடுப்பதற்குப் பெயர் தனித்துவ அடையாள அரசியலும் இல்லை. பெருந்தேசிய கட்சிகள் ஊடான சமூக அரசியலும் இல்லை என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, இதனை மனதில் கொண்டு, சரியான வழித்தடத்துக்கு முஸ்லிம் அரசியலைக் கொண்டு வரவேண்டும். அதன்பின்னர் சமூக வெற்றிக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி நகர வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணாமல் தலைவர்களும் எம்.பிக்களும் தமக்குத் தேவையானதை மட்டும் பெற்றுக்கொண்டு, அந்த அரசியலைச் செய்தால், அதற்கு வேறு பெயர்தான் வைக்க வேண்டும்.



## சூர்யாவின் படங்கள்
# விருதுகளை அள்ளுகின்றன

தென்னிந்திய சினிமாவில் டாப் ஹீரோக்களில் ஒருவராக திகழ்ந்து கொண்டிருப்பவர் நடிகர் சூர்யா. இவரது நடிப்பில் வெளியான ‘சூரரைப் போற்று’ திரைப்படம் சமீபத்தில் 5 தேசிய விருதை பெற்றது. தற்போது மீண்டும் ஒரு புதிய விருதுக்கு சூர்யாவின் அடுத்த படமான ‘ஜெய் பீம்’ திரைப்படம் தேர்வாகியுள்ளது.

அதாவது நடிகர் சூர்யாவின் நடிப்பில் கூட்டத்தில் ஒருவன் பட இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் உருவாகி வெளியான திரைப்படம் ஜெய்பீம். இதில் முக்கிய கதாபாத்திரங்களாக லிஜோமோன் ஜோஸ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் நடித்துள்ளனர். இருளர் பழங்குடியின மக்களின் வாழ்க்கை மற்றும் உரிமைகள் பற்றி பேசும் இப்படத்தில் நடிகர் சூர்யா, பழங்குடியின மக்களுக்காக வாதாடும் வழக்கறிஞர் வேடத்தில் நடித்திருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியான இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று பலரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. குறிப்பிட்ட சமூகத்தைத் தவறாகச் சித்தரித்துள்ளதாகக் கூறி ஜெய் பீம் படக்குழு சில பிரச்சனைகளையும் சந்தித்தது. இருப்பினும் இப்படம் பல்வேறு சர்வதேச விருதுகளை வாங்கிக் குவித்துள்ளது.

மேலும் இந்த படத்தின் வெற்றியால் பல, விருதுகளும் கிடைத்தன. சமீபத்தில் இப்படத்திற்காக 12ஆவது தாதா சாகேப் பால்கே திரைப்பட விழாவில் ஜெய்பீம் படத்திற்கு 2 விருதுகள் கிடைத்தன.

இதில் இப்படத்தில் நடித்த ராஜகண்ணு கதாபாத்திரத்தில் நடித்த மணிகண்டன் சிறந்த துணை நடிகராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில் ஜெய் பீம் திரைப்படம் மீண்டும் ஒரு சர்வதேச விழாவில் விருதுக்கு தேர்வாகியுள்ளது. அதன்படி 12ஆவது பெய்ஜிங் சர்வதேச திரைப்பட விழாவில் டியாண்டன் விருதுக்கு அதிகாரப்பூர்வமாக ஜெய் பீம் திரைப்படம் தேர்வாகியுள்ளது.

# ஒகஸ்ட் 18 இல் ‘திருச்சிற்றம்பலம்’




நடிகர் தனுஷ் நடிப்பில் தற்போது திரைக்கு வர தயாராக இருக்கும் படம் தான் ‘திருச்சிற்றம்பலம்’. இப்படத்தை இயக்குனர் மித்ரன் ஜவஹர் இயக்கியுள்ளார். இதில் நித்யா மேனன், ராஷி கண்ணா, ப்ரியா பவானி சங்கர் ஆகிய மூவரும் கதாநாயகிகளாகவும் நடித்துள்ளனர். இவர்களுடன் முன்னணி இயக்குநர் பாரதிராஜா, நடிகர் பிரகாஷ் ராஜ் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு இசையமைப்பாளர் அனிருத் இசை அமைத்துள்ளார். இப்படம் வரும் ஒகஸ்ட் 18ஆம் திகதி வெளியாக உள்ளது. இப்படத்தின் பாடல்கள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருந்த நிலையில் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் பல முன்னணி பிரபலங்கள் கலந்து கொண்டனர். அந்நிகழ்ச்சியில் பேசிய அனிருத் DandA கூட்டணியில் உருவாகியுள்ள திருச்சிற்றம்பலம் பாடலுக்கு ரசிகர்கள் நல்ல வரவேற்பு கொடுத்துள்ளனர்.

அதனால் ட்விட்டரிலும் DandA என்று வைரலாகி வருகிறது. அந்த ‘டி’ இல்லன்னா இந்த ‘ஏ’ இல்லை என்று கூறியுள்ளார். அதாவது அனிரூத்தால் மட்டுமே இந்த வெற்றி கிடைக்கவில்லை. தனுஷால் தான் இந்த வெற்றி கிடைத்துள்ளது என்று நெகிழ்ச்சியோடு அனிரூத் கூறியிருக்கிறார்.

# வாரிசு அப்டேட்
## உற்சாகத்தில் ரசிகர்கள்



பீஸ்ட்படத்தின் வெற்றியை தொடர்ந்து தற்போது தளபதி விஜய் நடித்து வரும் படம் தான் ‘வாரிசு’. இப்படத்தை இயக்குனர் வம்சி படைப்பள்ளி இயக்க தயாரிப்பாளர் தில் ராஜு தயாரிக்கிறார்.

இதில் விஜய்க்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்க சரத்குமார், பிரபு, பிரகாஷ்ராஜ், நடிகர் சாம், யோகி பாபு, ஸ்ரீகாந்த் போன்ற முன்னணி நட்சத்திரங்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

தமன் இசையில் உருவாகி வரும் இப்படத்தை இயக்குனர் வம்சி தமிழ் மற்றும் தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் உருவாக்கி வருகிறார்.

அவ்வப்போது இப்படம் குறித்த தகவல்கள் மற்றும் படப்பிடிப்பு புகைப்படங்கள் என வெளியாகி ரசிகர்களை உற்சாகப்படுத்தி வரும் நிலையில், தற்போது விஜய் இப்படத்தின் மூலம் ரசிகர்களுக்கு கொடுக்க இருக்கும் இன்ப அதிர்ச்சியான தகவல் வெளியாகி உள்ளது. அதாவது, இந்த படத்தில் விஜய் இரட்டை கதாப்பாத்திரத்தில் நடிக்க இருப்பதாகவும், அதில், நடிகர் மற்றும் வில்லன் கதாப்பாத்திரங்களில் விஜய் தான் நடிக்க போவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்த தகவல் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## விஜய் சேதுபதியின்
# வெற்றிக்கான இரகசியம்



ரசிகர்களால் செல்லமாக மக்கள் செல்வன் என்று அழைக்கப்படும் நடிகர் விஜய் சேதுபதி, தமிழ் சினிமாவில் முதல் முதலில் முன்னணி நடிகர்களோடு, துணை வேடத்தில் தான் நடிக்க ஆரம்பித்தார்.

இவர் ஹீரோவாக நடிப்பது மட்டுமின்றி தனக்கு பிடித்த கதாபாத்திரங்களான சிறு கதாபாத்திரங்கள் மற்றும் வில்லன் போன்ற அனைத்து கதாபாத்திரங்களிலும் நடித்து அசத்தி வருகிறார். தற்போது இவர் நடித்த விக்ரம் திரைப்படத்தின் மூலம் மாபெரும் வெற்றியை கண்ட விஜய் சேதுபதி தற்போது பல படங்களில் ஹீரோ மற்றும் வில்லனாக பிஸியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில், சமீபத்தில் எடுக்கப்பட்ட பேட்டியில் தனது வாழ்க்கைக்கான சக்சஸ் குறித்த விஷயங்களை பகிர்ந்திருக்கிறார். அதில் அவர் “எப்பொழுது ஒருவர் நான் இந்த விஷயத்தை கற்றுக் கொண்டு விட்டேன், எனக்கு இது தெரியும் என்று கூறுகிறார்களோ, அவர்கள் வாழ்வில் வீழ்ச்சி அடைய தொடங்கிவிட்டனர் என்று அர்த்தம்”, நாம் அந்த வார்த்தைகளை ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது.

ஏனெனில், நாம் வாழும் வாழ்க்கையில் தினமும் மற்றவர்களிடம் இருந்து புதுப்புது விஷயங்களை கற்றுக் கொண்டுதான் இருக்கின்றோம் வாழ்வில் கற்றுக்கொள்ள நிறைய விஷயங்கள் உள்ளது தனக்கு எல்லாம் தெரியும் என்று பேசுவது ஓவர் கான்ஃபிடன்ட்டை ஏற்படுத்திவிடும் அதன் மூலம் நாம் சீக்கிரம் விழுந்து விடுவோம். அதனால் அவற்றை தவிர்த்து புது விஷயங்களை கற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்று தனது சக்சஸ் சீக்ரெட்டை பகிர்ந்து உள்ளார். இவர் கூறியுள்ள இந்த விஷயங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது மட்டுமின்றி அனைவரிடமும் தன்னம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது.



புதுடெல்லி

## சீனாவின் உளவு கப்பலை
# “உன்னிப்பாக கவனிக்கின்றோம்”

சீனாவின் உளவு கப்பல் வருவதை இலங்கை அரசு அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ள நிலையில் மத்திய அரசு நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த மத்திய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பக்சி, சீன உளவுக் கப்பல் வருவதை நாம் அறிவோம். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலனில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்த விளைவையும் உன்னிப்பாக கவனித்து வருகிறோம் என்றார்.

சீனாவின் உளவு கப்பல் வருகையானது இந்திய பாதுகாப்பிற்கு கேள்விக்குறியாக அமையுமா? என்பதை மிகவும் உன்னிப்பாக இந்த நாடுகள் கவனித்து வருகின்றது. இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கும் என்றும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிகார்

# சடலத்தை கயிறு கட்டி இழுத்து சென்ற அவலம்



வீதியோரத்தில் இறந்து கிடந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனை அறைக்கு கயிறு கட்டி இழுத்துச் சென்ற அவல சம்பவம் பிகாரில் அரங்கேறியுள்ளது. இதுதொடர்பான வீடியோ சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து, அம்மாவட்ட சார்பு ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து காவல் கண்காணிப்பாளர் யோகேந்திர குமார் கூறுகையில், “கடந்த புதன்கிழமை, பீகாரின் பெகுசாராய் மாவட்டம் லாகோ காவல் வட்டத்தில் உள்ள நிபானியா கிராமத்தில் சாலையோரம் அடையாளம் தெரியாத நபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இதை அடுத்து, சார்பு ஆய்வளார் பொறுப்பு வகித்து வரும் அனில் குமார் சிங், இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கவும், இறந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் செல்லவும் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

ஆனால், இறந்தவரின் உடல் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படவில்லை. இரண்டு துப்புரவுப் பணியாளர்களை கொண்டு அருகில் உள்ள பெகுசாராய் சாதர் மருத்துவமனைக்கு கயிரைக் கட்டி உடலை இழுத்துச் சென்றுள்ளனர்” என்று தெரிவித்தார்.



சென்னை

## 4 ஆம் ஆண்டு நினைவுநாள்
# தி.மு.க அமைதி பேரணி

திராவிட முன்னேற்ற கழகத்தில் (தி.மு.க) 50 ஆண்டுகளுக்கு மேலாக தலைவராக பதவி வகித்தவர் கருணாநிதி. தேர்தலில் தோல்வி அடையாத தலைவர் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு. 2018 ஆம் ஆண்டு ஒகஸ்டு 7ஆம் திகதி அவர் மரணம் அடைந்தார். அவருக்கு மெரினா கடற்கரையில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. முக்கிய நாட்களில் தி.மு.க. தலைவர்கள் கருணாநிதியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துவது வழக்கம். இந்த நிலையில் வரும் 7 ஆம் திகதி அவருக்கு 4 ஆம் ஆண்டு நினைவுநாள் ஆகும். இதையொட்டி அன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதி பேரணி நடத்தப்போவதாக தி.மு.க. அறிவித்துள்ளது.

குஜராத்

# கழலை நோயால் 5,000 மாடுகள் இறந்தன



குஜராத் மாநிலத்தில் கால்நடைகளைத் தாக்கும் தோல் கழலை நோய் மிக வேகமாக பரவி வருகிறது. இதுவரை அங்கு 5,000க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன.

இருப்பினும் இறந்துபோன மாடுகளின் சடலங்கள் பொது இடங்களில் குவிந்து கிடப்பதால் மனிதர்களுக்கும் நோய் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

“நாங்கள் உடல்களை சீக்கிரமாக அப்புறப்படுத்தவே முயல்கிறோம். ஆனால் மழை தொடர்ந்து பெய்து வருவதால் குழிகள் தோண்டுவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே சடலங்களை அப்புறப்படுத்த முடியவில்லை” என் புஜ் நகராட்சி நிர்வாக தலைவர் கன்ஷ்யாம் தக்கார் தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் மட்டும் 37,000 மாடுகளுக்கு இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி

# காதலியின் மார்பால் காதலி செய்த செயல்



கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் பகுதியைச் சேர்ந்த 28- வயதுடைய வாலிபர் ஒருவர் பூ வியாபாரம் செய்து வருகிறார்.

இந்நிலையில் பக்கத்து ஊரைச் சேர்ந்த பெண்ணொருவர் மார்த்தாண்டம் பகுதியில் உள்ள கல்லூரி ஒன்றில் பி.எஸ்.சி இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார்.

அவ்வழியாக சென்ற கல்லூரி மாணவிக்கும் வாலிபருக்கும் காதல் ஏற்பட்டுள்ளது. இதில் இருவருக்கும் காதலிக்க தொடங்கியுள்ளனர், வாலிபர் மாணவியை கண்மூடித்தனமாக காதலித்துள்ளார்.

மாணவி எங்கு சென்றாலும் பின்தொடர்வது, மேலும் நான் உயிர் வாழ்வதே உனக்காக தான் என பல்வேறு வசனங்களை பேசி உள்ளார்.

ஒரு கட்டத்தில், மாணவி தன்னை உண்மையாக காதலிக்கிறாரா? என தெரிந்து கொள்ள விரும்பிய வாலிபர், மாணவியின் மார்பில் தன்னுடைய பெயரை பச்சை குத்த வற்புறுத்தியுள்ளார்.

வாலிபரின் காதல் லீலை அத்துமீறி செல்வதை பார்த்த மாணவி பயந்து அரண்டு போய் உள்ளார். இது குறித்து தனது வீட்டில் கூறியுள்ளார்.

அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவரது தந்தை, மார்த்தாண்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளார். இதனால் உஷாரான பொலிஸார் வாலிபரை அலேக்காக தூக்கி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

இளைஞனிடம் விசாரித்தபோது, தான் மாணவியை காதலிப்பதாகவும் அவள் தனக்கு வேண்டும் எனவும் கூறிவருகிறார். இதனால் அதிர்ச்சி அடைந்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை

# மாணவியிடம் சில்மிஷம்: சிக்கினார் கணவன்

சென்னை, திருவொற்றியூர் பெரியார் நகரைச் சேர்ந்த ஒருவர், அப்பகுதியில் 30 வருடங்களாக தனியார் வகுப்புகளை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு பரீட்சையில் சித்தியடையாத மாணவியொருவர், கடந்த சில மாதங்களுக்கு முன்பு தனியார் வகுப்பு நிலையத்துக்கு படிக்க வந்துள்ளார். அப்போது மாணவிக்கும், தனியார் வகுப்பு நிலையத்தின் ஆசிரியருக்கும் இடையில் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதுவே, முறையற்ற தொடர்பில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இதனை அறிந்த மனைவி, கணவனை தட்டிக் கேட்ட போது அவரை கொலை செய்து விடுவதாக தனியார் வகுப்பு ஆசிரியர் மிரட்டியுள்ளார்.

இது தொடர்பாக மனைவி அளித்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து, தனியார் வகுப்பு ஆசிரியரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா




இங்கிலாந்துக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை இங்கிலாந்தும்,

இரண்டாவது போட்டியை தென்னாபிரிக்காவும் வென்ற நிலையில், செளதாம்டனில் நேற்று

முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியை தென்னபிரிக்கா வென்ற நிலையிலேயே

தொடரை 2-1 என தென்னபிரிக்கா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி:

தென்னாபிரிக்கா: 191/5 (20 ஓவ.) (ரீஸா ஹென்ட்றிக்ஸ் 70 (50), ஏய்டன் மார்க்ரம் ஆ.இ 51 (36), ரீலி றொஸோ 31 (18), டேவிட் மில்லர் 22 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: டேவிட் வில்லி 3/25 [4], மொயின் அலி [1])

இங்கிலாந்து: 101/10 (16.4 ஓவ. ) (பந்துவீச்சு: தப்ரையாஸ் ஷம்சி 5/24 [4], அன்டிலி பெக்லுவாயோ 1/23 [4], ஏய்டன் மார்க்ரம் 1/5 [1], அன்றிச் நொர்ட்ஜே 1/12 [2])

போட்டியின் நாயகன்: தப்ரையாஸ் ஷம்சி

தொடரின் நாயகன்: ரீஸா ஹென்ட்றிக்ஸ்

இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## சிம்பாப்வேயை வென்ற பங்களாதேஷ்

சிம்பாப்வேக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, வரிசையாக மொஷாடெக் ஹொஸைனிடம் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

பின்னர் சிகண்டர் ராசாவின் 62 (53), றயான் பேர்ளின் 32 (31) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களை சிம்பாப்வே பெற்றது.

பதிலுக்கு, 139 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், லிட்டன் தாஸின் 56 (33) ஓட்டங்களோடு 17.3 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மொஷாடெக் ஹொஸைன் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள்

## தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா

பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்தும் பதக்கப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்துகின்ற அவுஸ்திரேலியா முதலாமிடத்தில் காணப்படுகின்றது.

அவுஸ்திரேலியா, 22 தங்கப் பதக்கங்கள், 13 வெள்ளிப் பதக்கங்கள், 18 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 53 பதக்கங்களுடன் காணப்படுகின்றது. இரண்டாமிடத்தில் 11 தங்கப் பதக்கங்கள், 16 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 34 பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் போட்டியை நடாத்தும் நாடான இந்தியா காணப்படுகின்றது. மூன்றாமிடத்தில், 10 தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 19 பதக்கங்களுடன் நியூசிலாந்து காணப்படுகின்றது.

ஹங்கேரியன் குரான் பிறீ:

## 10ஆம் இடத்திலிருந்து வென்ற வெர்ஸ்டப்பன்



ஹங்கேரியில் நடைபெற்ற ஹங்கேரியன் குரான் பிறீயில், 10ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்த நடப்பு போர்மியுலா வண் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

ஒரு தடவை முன்னிலையிலிருந்து சுழன்று முன்னிலையை இழந்தபோதும் பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க்கை இரண்டு தடவைகள் முந்தியே வெர்ஸ்டப்பன் வென்றிருந்தார்.

இரண்டாமிடத்தை, பந்தயத்தை ஏழாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டனும், மூன்றாமிடத்தை பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த அதேயணியின் ஜோர்ஜ் ரஸலும் பெற்றிருந்தர்.

இவ்வாண்டு போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 258 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் முதலாமிடத்திலுள்ளார்.

## சமநிலையில் யுனைட்டெட் றயோ வல்லெகனோ



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், ஸ்பானிய லா லிகா கழகமான றயோ வல்லெக்கனோவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அமட் டியலோ பெற்றதோடு, வல்லெக்கனோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அல்வரோ கர்சியா பெற்றிருந்தார்.

கொங்கோ

கிழக்கு காங்கோவில் பதற்றம்

## ஐ.நா. அமைதி காப்பாளர்கள் துப்பாக்கி சூடு



கிழக்கு கொங்கோ, ஜனநாயக குடியரசு நாட்டில் பல ஆண்டுகளாகப் பயங்கரவாதிகளின் தொடர் வன்முறைக்கு மக்கள் இலக்காகி வருகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்தி, மக்களை பாதுகாக்க ஐ.நா. அமைதி காப்பாளர்கள் குழு தவறி விட்டனர் எனக் கூறி பெரும் போராட்டம் வெடித்தது.

இதில் கடந்த திங்கட்கிழமை முதல் போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதில், 3 அமைதி காப்பாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவத்திற்கு சர்வதேச அளவில் பெரும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிலையில், விடுமுறைக்கு சென்று விட்டு காங்கோ ஜனநாயக குடியரசு நாட்டிற்கு, பணிக்கு திரும்பிய ஐ.நா. அமைதி காப்பாளர்கள் குழுவைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் கிழக்கு காங்கோ எல்லை பகுதியில் திடீரென துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

இதனால், கொங்கோ-உகாண்டா எல்லை பகுதியில் கசிந்தி என்ற இடத்தில் மக்கள் பலர் பலியாகி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. வீரர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதற்கான காரணம் தெளிவாக தெரியவில்லை. இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது.

சந்தேகத்திற்குரிய வீரர்கள் கைது செய்யப்பட்டு, எந்த நாட்டை சேர்ந்தவர்கள் அவர்கள் என விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று கொங்கோவில் உள்ள ஐ.நா.வுக்கான பொது செயலாளரின் சிறப்பு பிரதிநிதி பின்டவ் கெய்டா கூறியுள்ளார்.

அமெரிக்கா

## 4 முறை கருச்சிதைவு; 5ஆவது தடவை நடந்த அதிசயம்



அமெரிக்காவைச் சேர்ந்த ஆஷ்லே நெஸ் (Ashley Ness) என்பவருக்கு, ஒரு மகள் மற்றும் இரண்டு வளர்ப்பு மகன்கள் உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, நான்கு முறை அடுத்தடுத்துக் கருவுற்ற ஆஷ்லே நெஸ் கருச்சிதைவு ஏற்பட்டதால் குழந்தை பெற முடியாமல் போயுள்ளது.

இதனால் மிகுந்த மன வேதனையில் இருந்து வந்துள்ள அவருக்கு திடீரென ஒரு அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கர்ப்பம் அடைந்த ஆஷ்லே நெஸ்ஸுக்கு சமீபத்தில் ஒரே பிரசவத்தின் போது, நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்ட நாளுக்கு, 12 வாரங்கள் முன்பாகவே அவர் இந்த நான்கு குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளார்.

இதில் என்ன ஒரு அதிசயம் என்னவென்றால், நான்கு குழந்தைகளில் மொத்தம் இரண்டு இரட்டையர்கள் என்பதுதான். பொதுவாக, இரண்டு இரட்டை குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பெண்ணுக்கு பிறப்பது என்பது, ஒரு கோடியில் ஒருவருக்கே நிகழும் என்றும், அது மட்டுமில்லாமல் சில நேரம் அப்படி கூட இல்லாமல், மிக மிக அரிய வகையில் தான், இது போல ஒரே பிரசவத்தில் இரட்டை குழந்தைகள் உருவாகும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சுமார் 30 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் மகப்பேறு மருத்துவர் ஒருவர் கூறுகையில், ஆஷ்லே நெஸ்ஸுக்கு நடந்தது மிகவும் ஆபத்தான கர்ப்பம் என்றும், தனது முப்பது ஆண்டுகால மருத்துவ பணியில் இப்படி கேள்விப்பட்டது இதுவே முதல் முறை என்றும் குறிப்பிட்டுள்ளார்.



ஈரான்

ஈரானில் கடும் வெள்ளப்பெருக்கு;

## 69 பேர் உயிரழப்பு; 45 பேர் மாயம்

ஈரானில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் தொடர் மழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 69 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக செஹர்மேகல், தெக்ரான், மாந்தரன், லோரெஸ்தான், யாஸ்த், இஸ்பஹான், பத்தியாரி உள்ளிட்ட 24 மாகாணங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 69 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 41 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 41 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் தொடர் மழைகாரணமாக பல மாகாணங்களுக்கு தீவிர வெள்ள எச்சரிக்கை அபாயம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## சீனாவின் போர் ஒத்திகையால் அதிர்ச்சியில் உலக நாடுகள்

சர்ச்சைக்கு உரிய தாய்வான்தீவுக்கு அருகில் போர் ஒத்திகையில் ஈடுபட்டதாக சீனா அறிவித்து உள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு அரச ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் "பூஜியன் மாகாணத்தையொட்டிய பிங்டன் தீவில் சீன இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டது.

காலை 8 மணிமுதல் 9 மணி வரை நடந்த இந்த போர் ஒத்திகையில் உண்மையான குண்டுகளும் வெடிபொருட்களும் பயன்படுத்தப்பட்டன. " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இப் போர் ஒத்திகையில் ஏவுகணைகள், போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டனவா என்பது தொடர்பான தகவல் இல்லை.

சீன உள்நாட்டுப் போருக்குப் பின் தைவான் தனி நாடாக செயல்பட்டு வந்தாலும், அத்தீவை தங்களது அங்கமாகவே தற்போதும் சீனா கருதி வருகிறது.

தாய்வானை சீனா உடன் இணைத்துக்கொள்ள தங்களுக்கு உரிமை உள்ளதாகவும், தேவைப்பட்டால் இராணுவ பலம் கூடப் பயன்படுத்தப்படும் என்றும் சீன ஜனாதிபதி ஷிஜின்பிங் கூறிவருகிறார்.

இந்நிலையில் நான்சி பெலோசி அத்தீவுக்கு பயணம் மேற்கொள்ளக்கூடும் என சென்ற வாரம் தகவல் வெளியாகியது.

அது உறுதியானால் சென்ற 1997ஆம் வருடத்திற்கு பின் தாய்வான் செல்லவிருக்கும் முதல் அமெரிக்க உயர்நிலை எம்.பி.யாக பெலோசி இருப்பார்.

இதற்கு சீனாவானது கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. தாய்வான் விவகாரத்தில் தலையிடுவதன் வாயிலாக அமெரிக்கா நெருப்போடு விளையாடுகிறது என ஷிஜின்பிங் எச்சரித்தார்.

இச்சூழலில் தாய்வானுக்கு அருகே சீனா தற்போது போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் இந்நடவடிக்கையானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியா

ஒசாமாவின் குடும்பத்திடம்

## இளவரசர் சார்லஸ் நிதி உதவி?

ஒசாமா பின்லேடனின் குடும்பத்திடம் இருந்து பிரித்தானிய இளவரசர் சார்லஸ் நிதியுதவி பெற்றுள்ளார் எனப் பிரபல ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த செய்தியில், ஒசாமாவின் உறவினர் சகோதரருமான ஷபிக் பின்லேனிடமிருந்து கடந்த 2013 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி பெற்றதாக குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இந்த தொகை பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் அறக்கட்டளைக்கு சென்றதால், தனிப்பட்ட கணக்குகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகிறது. இளவரசர் சார்லஸ் தரப்பில் இருந்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 02 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது